**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி (Higher Certificate Course)**
**HG30 – நிலை III (Grade III)**

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**
**ஜூலை–ஆகஸ்ட் 2021**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10 x 1 = 10)**

1. கதிரவன் கடவுளைத் தொழும் கை எது?
2. மொழி வாழ்த்துப் பாடல் இடம்பெற்ற நூல் எது?
3. திருக்குறள் எத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளது?
4. காளமேகப்புலவர் எதில் வல்லவர்?
5. மூன்றாம் நந்திவர்மன் எந்நாட்டு மன்னன்?
6. பாரதியாரின் இயற்பெயர்?
7. மணியைச் சோம்பேறி எனக் குறிப்பிட்டவர் யார்?
8. திரிகூடராசப்பக் கவிராயர் எழுதிய நூல் எது?
9. தளை என்பது எதன் உறுப்புகளுள் ஒன்று?
10. சார்பெழுத்துகள் மொத்தம் எத்தனை?

**பகுதி – ஆ**

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. தமிழை எவ்வாறு நல்லவர்கள் வணங்கித் தொண்டு செய்தனர்?
2. அன்றே ஒழிய விட வேண்டியது எது?
3. கள்ளி – கடல் இவற்றில் பிறப்பன யாவை?
4. எள் செக்கிலிட்டால் கிடைக்கும் பொருள்கள் யாவை?
5. மழை முகில் கண்டு வானில் திரிவன யாவை?
6. பாரதியார் புதுச்சேரியில் ஏன் வாழ்ந்தார்?
7. வேலிப்போடுவதன் நோக்கம் யாது?
8. மண்ணிடை மறுபடி பிறக்கும் கடவுள் யார்?
9. நடுகல் என்பது என்ன?

10. மணியின் தொல்லை பொறுக்காத ஆசிரியர் என்ன செய்தார்?
11. குற்றால நாதர் கோயிலில் உள்ள தெய்வங்கள் யாவை?
12. தமிழ் இலக்கியங்களில் உள்ள வலவன் ஏவா வானூர்தியின் சிறப்பு என்ன?
13. மணி போட்டியில் கலந்து கொள்ள விரும்பாமைக்குக் கூறிய காரணம் யாது?
14. பகுபத உறுப்புகளை எழுதுக.
15. மாத்திரை என்றால் என்ன?

**பகுதி – இ**

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**
***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. நான்மணிக்கடிகை பெயர்க்காரணம் கூறுக?
2. தொண்டை நாட்டு அரசன் மூன்றாம் நந்திவர்மனைப் பற்றி எழுதுக
3. திருமாலிடம் எட்டெழுத்து அறிவுரை பெற்ற ஆழ்வார் யார்? நாராயணா என்னும் நாமம் தரக்கூடியவை யாவை?
4. சீறாப்புராணம் குறிப்பு வரைக.
5. தேவநேயப்பாவாணர் பற்றி குறிப்பு வரைக.
6. தமிழ் நாட்டில் வாழ்ந்த சில கவிஞர்களின் பெயர்களைக் கூறுக
7. பொருள் பின்வரு நிலையணியை விளக்குக
8. சிறு பொழுது நாளின் கூறுபாடுகளை எழுதுக

**பகுதி – ஈ**

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**
***Aswer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. காவிரி ஆறு குறித்து எழுதுக
2. இளங்கோவடிகள் பற்றி குறிப்பு வரைக
3. வினா எத்தனை வகைப்படும்? அவையாவை?

**பகுதி – உ**

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**
***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. தமிழின் சிறப்பு குறித்து தேவ நேயப்பாவாணர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக
2. கருத்து வகை வாக்கியம், அமைப்பு வகை வாக்கியம் தொகுத்து எழுதுக

.....